# தமிழ்நாடு தகவல் ஆணையம்

பிளாக் எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம், சென்னை-600 035. தொலைபேசி எண்.044-2951 5590

## ஆணை நாள் – 15.07.2026
**(காணொளி காட்சி விசாரணை)**

## முன்னிலை
**திரு. வி.பி.ஆர். இளம்பரிதி, எம்.ஏ., எம்.பில்., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 15901/A/2024**

திரு. சி.காசிராஜன் -- மனுதாரர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ),
வட்டார வளர்ச்சி அலுவலகம், -- பொது அதிகார அமைப்பு
அன்னவாசல் ஒன்றியம்,
புதுக்கோட்டை மாவட்டம்.

## ஆணை

இவ்வழக்கின் மீது இவ்வாணையத்தில் இன்று (15.07.2026) முற்பகலில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

| | |
|---|---|
| மனுதாரர் | திரு. சி.காசிராஜன் ஆஜராகவில்லை |
| பொது அதிகார அமைப்பு | திருமதி.R.மேகலா<br>பொதுத் தகவல் அலுவலர் / துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), வட்டார வளர்ச்சி அலுவலகம், அன்னவாசல் ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம் அவர்கள் நேரில் ஆஜரானார். |
| சட்டப் பிரிவு 6(1) மனு நாள் | 08.09.2024 |
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)இன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில், கடந்த 01.01.2020-ம் தேதி முதல், 31.03.2022-ம் தேதி வரையில், புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம் எல்லைக்குட்பட்ட, பெருமநாடு ஊராட்சியின் வரவு செலவு கணக்கு விவரங்களை, (குறிப்பு ஷை ஆவணங்கள் அனைத்தும் கணிணி வழியாக பராமரிக்கப்பட்டு, உயர் & கீழ்நிலை அலுவலகங்களுக்கு பரிமாறப்பட்டுள்ளதால், ஷை ஆவணங்களை, மனுதாரர் ஆகிய | |

| | |
|---|---|
| தனக்கு CD வடிவில் அல்லது எந்த வடிவில் உள்ளதோ, அதே வடிவில்) வழங்குமாறு கோரியுள்ளார். மேலும், 9 இனங்களில் தனக்கு தகவல்கள் வழங்கக்கோரி விண்ணப்பித்துள்ளார். | |
| சட்டப் பிரிவு 6(3)-ன்கீழ் மனு மாற்றம் செய்த நாள் | ----- |
| பொதுத் தகவல் அலுவலரின் பதில் நாள் | ----- |
| பிரிவு 19(1) முதல் மேல்முறையீட்டு மனு நாள் | 14.10.2024 |
| மேல்முறையீட்டு அலுவலரின் பதில் நாள் | ----- |
| பிரிவு 19(3) -ன்இரண்டாம் மேல்முறையீட்டுமனு நாள் | 04.12.2024 |

2. இன்றைய தின விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் திருமதி.R.மேகலா, பொதுத் தகவல் அலுவலர் / துணை வட்டார வளர்ச்சி அலுவலர்(கி.ஊ), வட்டார வளர்ச்சி அலுவலகம், அன்னவாசல் ஒன்றியம், புதுக்கோட்டை மாவட்டம் அவர்கள், மனுதாரர் கோரிய தகவல்களுக்கு ந.க.எண்.தி1/3299/2021, 04.12.2024 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக மேல்முறையீட்டு அலுவலரால் தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

3. இன்றைய விசாரணையின் முடிவில், மனுதாரரின் மனுவையும் பொதுத் தகவல் அலுவலரின் பதிலையும் இணைத்து பரிசீலனை செய்கையில், பொதுத் தகவல் அலுவலரால் உரிய காலத்தில் உரிய தகவல்கள் அளிக்கப்படவில்லை என ஆணையம் கருதுகிறது. மேலும், 30 நாளுக்குள் தகவல் அளித்தால் மட்டுமே உரிய கட்டணம் செலுத்தி தகவலை பெற்று மனுதாரருக்கு அறிவுறுத்த இயலும். ஆனால், 30 நாட்களுக்குள் தகவல் அளிக்கப்படவில்லை. ஆனால் உரிய கட்டணம் செலுத்தி தகவல் பெற்றுக்கொள்ளுமாறு மனுதாரருக்கு தகவல் அளிக்கப்பட்டுள்ளதை இவ்வாணையம் வன்மையாக கண்டிக்கிறது. இவற்றின் அடிப்படையில், பொதுத்தகவல் அலுவலருக்கு இறுதி வாய்ப்பளித்து இவ்வாணையம் பின்வருமாறு உத்தரவிடுகிறது :-

- ***மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ன் கீழான மனுவிற்கு உரிய காலத்திற்குள் தகவல் அளிக்காமல், உரிய கட்டணம் செலுத்தி தகவல் பெற்றுக்கொள்ளுமாறு மனுதாரருக்கு தகவல் அளித்த அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்), ஊராட்சி ஒன்றியம், அன்னவாசல், புதுக்கோட்டை மாவட்டம் அவர்களின் மீது தகவல் அறியும் உரிமை சட்டம், 2005, பிரிவு 20(1), 20(2)-ன் கீழ் ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதற்கான காரண விளக்கங்களை 12.08.2026 அன்று ஆணையத்தில் நேரடியாக ஆஜராகி சமர்ப்பிக்குமாறு உத்தரவிடப்படுகிறது. அப்போதைய மேல்முறையீட்டு அலுவலர் அவர்களுக்கு இக்கடிதத்தினை சார்வு செய்ய தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்களுக்கு இவ்வாணையத்தால் உத்தரவிடப்படுகிறது.***
- ***மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 6(1)-ல் கோரியுள்ள தகவல்களுக்குரிய தகவல்களை <u>"தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 இன் படி இத்தகவல்கள் வழங்கப்படுகிறது" என்ற முத்திரையுடன் பொதுத் தகவல் அலுவலர் உரிய சான்றொப்பமிட்டு</u> இவ்வாணை கிடைக்கப்பெற்ற இரு வார காலத்திற்குள் விரைவஞ்சலில் சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி மனுதாரருக்கு தகவல்களை அனுப்பிவைத்து விட்டு அதன் பின்னர்,***

***<u>மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல்</u> மற்றும் அவருக்கு வழங்கப்பட்ட தகவலின் நகல் மற்றும் மனுதாரருக்கு அனுப்பி வைத்த கடிதத்தின் அஞ்சலக இணையதள ஒப்புகை சீட்டின் நகல் (Proof of Postal Tracking) ஆகியவற்றினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு 12.08.2026 அன்று நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகின்றது.***

**ஒம்/- (வி.பி.ஆர். இளம்பரிதி)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 15901/A/2024</u>**
**பெறுநர்**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ),
ஊராட்சி ஒன்றியம்,
அன்னவாசல்,
புதுக்கோட்டை மாவட்டம் - 622 101

**<u>மனுதாரர்</u>**

திரு. சி.காசிராஜன்
604-1, சிதம்பரம் நகர்,
மாத்தூர் கிராமம் (ம) அஞ்சல்,
குளத்தூர் தாலுகா,
புதுக்கோட்டை - 622 515.

Copy to file

KRM/PA 16.07.2026